# வெற்றிடங்கள்

**அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம் - சுகாதார அமைச்சு**

கீழ்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்ப தகுதிவாய்ந்த, காத்திரமான, சுயஊக்கமும் தொழில் அபிலாஷையும் உடைய பணியாளர்களை SPMC தாபனத்துடன் இணையுமாறு அழைக்கின்றோம்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

i. இலங்கைப் பிரஜையாகவும்

ii. பதவிக்குரிய கடமைகளை நன்றாக சரியாக நிறைவேற்றுவதற்கும், தீவின் எந்தப் பாகத்திலும் பணியாற்றக் கூடியவாறு உடல் மற்றும் உள ரீதியில் பொருத்தமானவராகவும்

iii. சிறந்த நல்லொழுக்கமுடையவராகவும்

இருத்தல் வேண்டும்.

## 1. முகாமையாளர் - உற்பத்தி (MM 1-1 - தரம் II)

**தகைமைகள்:-**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து இயற்கை விஞ்ஞானத்தில், மருந்தாக்கத்தில் அல்லது பொறியியலில் முதல் தரப் பட்டத்தைப் பெற்றிருத்தல்,

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் / நிறுவனத்தில் இருந்து வேறேதாவது பிற இணையான இளமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்,

அத்துடன்

(ஆ) கணனி அறிவு,

அத்துடன்

(இ) மருந்துகள் உற்பத்தித் துறைக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரர் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்
2. பதவிக்குப் பொருத்தமான விடயப் பிரிவில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியில் (JM 1-1) உள்ள ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்தியான சேவை காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்

## 2. தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர் (MM 1-1- தரம் II)

**தகைமைகள்:-**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து இயற்கை விஞ்ஞானத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) பட்டத்தை அல்லது இரசாயனவியலில் விஷேட பட்டத்தைப் பெற்றிருத்தல்,

அத்துடன்

(ii) ஒரு அரச திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் பகுப்பாய்வு இரசாயனவியல் / மருந்தாக்கல் தர உத்தரவாத பிரிவுக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது 03 ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து இரசாயனவியல் அடங்கலாக BSc பொதுப் பட்டத்தை அல்லது அதற்கு இணையான தகைமைகளை பெற்றிருத்தல்

அத்துடன்

(iv) ஒரு அரச திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் பகுப்பாய்வு

இரசாயனவியல் / மருந்தாக்கல் தர உத்தரவாத பிரிவுக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது 05 ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

(ஆ) கணனி அறிவு

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்

2. பதவிக்குப் பொருத்தமான விடயப் பிரிவில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியில் (JM 1-1) உள்ள ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்தியான சேவை காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்

## 3. முகாமையாளர் - மருந்து தயாரிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (MM1-1 தரம் II)

**தகைமைகள்:-**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து இயற்கை விஞ்ஞானத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) பட்டத்தை அல்லது இரசாயனவியலில் விஷேட பட்டத்தைப் பெற்றிருத்தல்,

அத்துடன்

(ii) ஒரு அரச திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் பகுப்பாய்வு இரசாயனவியல் / மருந்தாக்கல் தர உத்தரவாத பிரிவுக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது 03 ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இருந்து இரசாயனவியல் அடங்கலாக BSc பொதுப் பட்டத்தை அல்லது அதற்கு இணையான தகைமைகளை பெற்றிருத்தல்

அத்துடன்

(iv) ஒரு அரச திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் பகுப்பாய்வு இரசாயனவியல் / மருந்தாக்கல் தர உத்தரவாத பிரிவுக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது 05 ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

(ஆ) கணனி அறிவு

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்

2. பதவிக்குப் பொருத்தமான விடயப் பிரிவில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியில் (JM 1-1) உள்ள ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்தியான சேவை காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்

**மேற்குறித்த (1), (2), (3) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு பொதுவானது:**

- **சம்பள அளவுத்திட்டம்:** MM 1-1 - ரூ. 53,175/= - 10 x 1,375/= - 15 x 1,910/= - 95,575/= மேற்குறித்த சம்பளங்களுக்கு மேலதிகமாக அரசாங்கம் அங்கீகரித்துள்ள ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

- **வயதெல்லை**: 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். இந்த உச்ச வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**பக்க நன்மைகள்**:

- வரவு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு
- பயன்படுத்தப்படாத வருடாந்த லீவுக்கும் சுகயீன லீவுக்கும் பணம் செலுத்தல்
- மருத்துவக் காப்புறுதி மற்றும் மருத்துவ மீளளிப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

- சம்பளத்தில் 15% வீதம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கூட்டுத்தாபனத்தினால் பங்களிக்கப்படுதல் மற்றும் ஊழியரினால் 10% வீதம் பங்களிக்கப்படுதல்
- ஊழியரின் சம்பளத்தின் 3% வீதம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கூட்டுத்தாபனத்தினால் பங்களிக்கப்படுதல்
- 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடை சட்டத்திற்கும் MSD சுற்றறிக்கைக்கும் இணங்க பணிக்கொடை செலுத்தப்படுதல்
- மேலும் வேறு பிற பக்க நன்மைகள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்**:

- விண்ணப்பம் உரிய மாதிரிப்படிவத்தில் தயாரிக்கப்பட்டு உறவினர் சாராத இரண்டு நபர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொடர்புகொள்ளக்கூடிய விபரங்களையும் குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்துடன் சகல கல்வித் தகைமை சான்றிதழ்களினதும் சான்றுபடுத்திய பிரதிகள் இணைக்கப்பட்டு அனுப்பப்படுதலும் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் https://www.spmc.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதவிறக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.
- அரச திணைக்களத்திலும் நியதிச்சட்ட சபைகளிலும் உள்ள விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களை விடுவிக்க முடியும் என்பதை சான்றுபடுத்தி அந்தத் திணைக்களத் தலைவர்களின் ஊடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.
- விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பாக்க மேல் மூலையில் எழுதப்படுதல் வேண்டும். உரிய விண்ணப்பப் படிவம் இந்த விளம்பரத்திலிருந்து 10 நாட்களுக்குள் பதிவுத் தபாலில் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.
- மேற்குறித்த தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
இலக்கம் 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை
கந்தாவள கிழக்கு - ரத்மலான

2024.06.09.